# வாலிபன்
# VAALIPAN

இதழ் - 58 / வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை / புரட்டாதி- 2012




**"நான் உன்னைத் தாயின் வயிற்றில்
உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்...."**

**- (எரேமியா 1 : 5)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலிபன்
# VAALIPAN

கிறிஸ்துவுக்குள் அன்பான 'வாலிபன்" வாசகர்களுக்கு,

வரப்போகும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

எதிர்வரும் மார்கழி மாதம் எமது ஊழியத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு வைபவங்கள் ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் முகமாக இடம்பெறவிருக்கிறது. அத்தோடு அம்மாதம் 'வன்னி' பிரதேசங்களில் கர்த்தருக்குச் சித்தமானால் ஊழியங்களை ஏறெடுக்கவிருக்கின்றோம். தயவாய் ஜெபிக்கவும்.

ஐப்பசி மாதம் 'பாட்டாளிபுரம்' என்கிற மிகவும் பின்தங்கிய இடத்தில் 'இலவச வைத்திய ஆலோசனை' நிகழ்வொன்றினை ஆயத்தம் செய்து வருகிறோம். இவ்வூழியத்தை தங்களது கொடைகளால் தாங்க விரும்புபவர்கள் தயவாய் எம்மைத் தொடர்புகொள்ளவும். முடியுமானால் அங்கிருக்கும் சிறுவர்களுக்குத் தானும் அடிப்படை மருந்துப் பொருட்களை வழங்க கிறிஸ்துவுக்குள் வாஞ்சிக்கின்றோம். திருகோணமலை மாவட்டத்தில் மூதூரை அண்டிய பிரதேசத்தில் யுத்தத்தினாலும் இயற்கை அழிவுகளினாலும் பாதிக்கப்பட்டு உறவுகளை இழந்த ஆயிரமாயிரமான விசுவாசிகளும் ஏனையவர்களும் பாட்டாளிபுரத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது தேவைகள் எண்ணற்றவை.

மேலும், இம்மாதம் 23ம் திகதி ஞாயிறன்று கோமாரி, பொத்துவில் பிரதேசங்களில் கர்த்தர் கொடுத்த தரிசனத்துக்கமைய, ஞாயிறு ஆராதனை, சிறுவர் ஒன்றுகூடல், வாலிபர் நிகழ்வுகள், 'உன்னுடைய இடத்தில் நான்' துண்டுப்பிரதி விநியோகம் போன்றவை அப்பிரதேசத்து ஊழியர்கள், வாலிபர்கள், விசுவாசிகளுடன் இணைந்து ஒழுங்குபடுத்தப்பட்டுக்கொண்டிருக் கிறது. தயவாய் ஜெபிக்கவும்.

மேலும், இவ்வூழியத்தின் விரிவாக்கத் திட்டத்திற்கமைய 'மலைநாட்டு வாலிபர்களுடனான **வாலிபன்** ஒன்றுகூடல்' ஐப்பசி மாதம் நடைபெறவிருக்கிறது.

மேற்கூறிய ஊழியங்களுக்காக தங்களது ஜெபங்களில் தாங்கிக்கொள்ள வேண்டுகிறேன்.

*கிறிஸ்துவின் பணியில்*
*ஆசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோன் வெஸ்லி

## கனம் ஜோன் வெஸ்லி ஐயரின் வாழ்க்கைச் சரிதம் தொடர் நிகழ்வாய்....... 28

**சகோ. இராஜநாயகம் சுரேந்திரன்**

திருச்சபையின் நிலை எவ்வாறு இருந்தது? சவால்கள் நிறைந்த அந் நாட்களில் இங்கிலாந்தின் மக்களுக்கு வழிகாட்டக் கூடியவர்களாக அமைந் தவர்கள் யார்? கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையானது கறைதிரை யற்று இருக்க வேண்டும் என்பதற்கேற்ப ஆங்கிலேயத் திருச்சபையானது தன்னைக் காத்துக்கொண்டதா? இங்கிலாந்து மக்களின் வீழ்ச்சிக்கும், தாழ் விற்கும் காரணமாயிருந்த திருச்சபையின் கீழ்மட்ட நிலைகளைக் காண்பிப் பது இத்தொடருக்கு மிகவும் அவசியமானது என சுரேந்திரனாகிய அடி யான் தாழ்மையுடன் கருதுகிறேன்.

வெஸ்லி ஐயரின் இயக்கமானது இங்கிலாந்தில் ஆரம்பிப்பதற்கு முன் னிருந்த மரித்துப்போன சபையைக் குறித்து அக்கால வரலாற்று ஆசிரியர்கள் பலரும் எழுதி வைத்துள்ளனர். பெயரளவில் போதகர்களாகப் பணியாற்றி யவர்கள் தேவ பயமின்றி மிகச் சாதாரணமாக ஊழியம் செய்ய முற்பட்ட னர். போதக ஊழியத்துக்கு வந்திருந்த அநேகமானோர் பிரபுக்களின் குடும்பங்களிலிருந்து வந்தமையால், இப்பரிசுத்த ஊழியத்தை தங்களது பெற்றோரின் செல்வாக்கை முன்னிட்டே பெற்றுக்கொண்டனர். அவர்கள் சபையினராகிய ஆடுகளைப் போஷிக்க வராமல், ஆடுகளினால் கிடைக்கும் ஆதாயத்தைப் பகிர்ந்துகொள்ளவே வந்தனர். அவர்கள் சபையின் வருமா னத்தினால் கிடைக்கக்கூடிய ஆதாயத்தையே குறிக்கோளாகக் கொண்டிருந்த படியினால் மக்களுக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்றோ அல்லது அவர் தம் தேவைகளுக்கு உதவிசெய்ய வேண்டுமென்றோ எண்ணவில்லை. இப் படியான போலியான போதகர்கள் சிற்றின்பங்களுக்கு அடிமைகளாக இருந் தனர். "பிஷப் பேனாட்" என்ற பேராயர் இப்படிப்பட்டவர்கள் பற்றிக் குறிப்பிடும்போது "என்னிடத்தில் குருத்துவ அபிஷேகம் பெறும்படி வந்த வர்கள் வேதாகமத்தை நன்கு படிக்காதவர்களே" எனக் குறிப்பிட்டுள்ளார்.

"டவுன்செண்ட்" எனப் பெயர்கொண்ட வரலாற்றாசிரியர் குறிப்பிடும் போது "சபையானது மேற்கண்ட நிலையிலிருந்தபோது மக்களின் இத யத்தை தொடக்கூடாமல் வெறும் சடங்காச்சாரங்களைக் கொண்டதாகவே காணப்பட்டது. மக்கள் துயரம் அடைந்தபோது அவர்களைத் தேற்றாமலும், அவர்களைத் தூய்மையிலும், பரிசுத்தத்திலும் நடத்தாமல் சபையின் பக்தி மார்க்கம் அமைந்திருந்தது" எனக் குறிப்பிட்டுள்ளார். "தொமஸ் லெயிட்டன்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பெயர்கொண்ட எழுத்தாளர் எழுதும்போது, அந்நாளில் காணப் பட்ட சபையைக் குறித்து "உயிர் நீங்கிய ஒரு அழகிய சடலம்" எனக் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவின் ஆவியில்லாததும் அவருடைய அன்பையும், வல்லமையையும் வெளிப்படுத்தாமலிருக்கிற சபையானது மரித்த சபையே. இதுவே அக்கால சபைகளில் நிலையாக இருந்தது. பக்தியின்மை மக்களி டையே பரவிற்று. இறைவன் ஒருவர் எங்கோ ஓரிடத்தில் இருக்கிறார். ஆனாலும் இப்போது மக்களைக் குறித்து சற்றும் கரிசனையற்றவராக இருக் கிறார் எனும் தவறான கொள்கை மக்களிடையே ஆழமாகப் பதிந்துபோயி ருந்தது. கிறிஸ்தவ மார்க்கமானது பகுத்தறிவிற்கு ஒவ்வாததொன்று என மக்கள் கருதி அதை மறுக்க ஆரம்பித்தனர். இவ்வகையான விவாதங்களுக்கு மிகத் துல்லியமான பதில்களைக் கொடுத்து, மீட்பின், இரட்சிப்பின், மனம் திரும் புதலின் நிச்சயத்தைக் காண்பித்துக் கொடுக்க மக்களிடையே எவரும் காணப் படவில்லை.

இப்படிப்பட்டதொரு காலப்பகுதியில் தான் ஜோன்வெஸ்லி ஐயர் உரு வாக்கம் பெறுகிறார். தீராப் பாவத்தின் விளைவாக எங்கும் துன்மார்க்கம் தாண்டவமாடிக்கொண்டிருந்த நிலைக்குப் பரிகாரம் உண்டென எவரும் எண்ணியிருக்க முடியாது. ஆனால் ஜோன் வெஸ்லி ஐயரோ பயங்கரமான துன்மார்க்கனையும் இரட்சித்து மாற்றக்கூடிய சிலுவையில் அறையுண்ட வரைத் தம்மோடு கொண்டிருந்தார். கிறிஸ்து இயேசுவின் இரத்தமானது எப்படிப்பட்ட பாவ வாழ்க்கையை வாழும் எந்த மனிதனையும் சுத்திகரிக்க வல்லது என்பதை வெஸ்லி அவர்கள் நன்கு அறிந்திருந்தார். ஆகவே, கேலி பரிகாசம் செய்துகொண்டும், சாபம் நிறைந்த வார்த்தைகளைப் பேசிக் கொண் டும், நரகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த திரளான மக்களைக் கண்ட போது அவருடைய இருதயம் மன உருக்கத்தினாலும், அவருடைய வாய் வேதாமக அக்கினி வசனங்களினாலும் நிரம்பி வழிந்தது. இவ்வாறு மறுரூபம் அடைந்த இந்தப் பிரசங்கியின் குரலானது நரக அக்கினியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஏராளமான மக்களின் வாழ்வை தடுத்து நிறுத்தும் மந்திரக் கோலாக மாற்றமடைந்தது. இம்மாற்றத்தினைக் கொண்டுவர வெஸ்லி ஐயர் அவர்கள் பட்டபாடு வார்த்தைகளினால் வர்ணிக்க முடியாது.

கனம் ஜோன் வெஸ்லி ஐயர் வடக்கே பிரயாணப்பட்டுப் போகையில் முதலாவதாக "நியூகாசில்" எனுமிடத்திற்கு வந்தார். அங்கு அவர் கண்ட காட்சியை விபரிக்கும்போது அவர், "இங்கே குடிவெறியும், கிண்டல்பேச்சுக்க ளும் மக்களிடையே மலிந்து காணப்பட்டன. பெரியவர்களும் குடித்தனர். சிறியவர்களும் குடித்தனர். இப்படிப்பட்ட காட்சியை இதற்கு முன் தான் கண்டதோ அல்லது கேள்விப்பட்டதோ இல்லை" என எழுதுகிறார். தொடர்ந்து அவர் எழுதிய வார்த்தைகளிலிருந்து அவரில் ஏற்பட்ட அதிர்ச்சி யையும், அவருடைய இருதயத்தின் மிருதுவான நிலையையும், ஆண்டவரா கிய கிறிஸ்துவைப் போலவே, பாவிகளை நேசித்த அவருடைய பண்பினையும் காணலாம்.

**(வெஸ்லி மீண்டும் வருவார்...)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத்திற்கு நற்செய்தியை அறிவியுங்கள்





நாம் நம் தேசத்தை நேசித்து, ஜெபித்தால் மாத்திரம் போதாது. தேசத்திற்கு நாம் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். 'சுவிசேஷம்' என்றால், 'நற்செய்தி'. இயேசுகிறிஸ்துவே அந்த நற்செய்தி! ஆக, இயேசு கிறிஸ்துவாகிய நற்செய்தியை நாம் நமது தேசத்திற்கு அறிவிக்க வேண்டும்.

நம் தேசம் ஆசீர்வதிக்கப்பட ஒரே வழி நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதான்! மெய்யான தெய்வமாகிய அவர் ஒருவர்தான் நம் தேசத்திலுள்ள ஒவ்வொருவருக்காகவும் சிலுவையில் தம்முடைய இரத்தத்தையே சிந்தினார். இயேசு கிறிஸ்து மூலமாகத்தான் நம் தேசம் சாபத்திலிருந்து விடுபட முடியும். இந்த நற்செய்தியை நாம் மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும். நம் தேசமெங்கும் அறிவிக்க வேண்டும். ஒரு கிராமத்தில் ஒரு மிஷனெரி இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தும், சிலுவையில் அவர் சிந்திய இரத்தத்தைக் குறித்தும் அறிவித்து வந்தார். இந்த நற்செய்தியைக் கேட்ட ஒரு மனிதன், அந்த மிஷனெரியின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "ஐயா, இந்த செய்தியை ஒரு வாரத்திற்கு முன்பாக வந்து ஏன் அறிவிக்கவில்லை? நீங்கள் ஒரு வாரத்திற்கு முன்பு வந்திருந்தால், என் மகனை இழந்திருக்க மாட்டேனே! நீங்கள் பிந்தியல்லவா இந்தச் செய்தியைச் சொல்ல வந்திருக்கிறீர்கள்!" என்று சொல்லி கண்ணீர்விட்டுக் கதறினார்.

என்ன நடந்தது என்று விளங்காத அந்த மிஷனெரி" ஏன் அப்படி சொல்கிறீர்கள்? என்று விசாரித்தார்.

அதற்கு அந்த மனிதன் "ஐயா, என் வாழ்க்கையில் ஒரு ஆசீர்வாதமுமில்லை. அதைக் குறித்து ஒரு பூசாரியினிடத்தில் நான் விசாரித்த போது, "உன் குடும்பத்தின் மீது சாபம் இருக்கிறது. அந்த சாபம் மாறவேண்டுமானால், இந்த மலையிலிருக்கிற தெய்வத்திற்கு மூன்று நரபலி செலுத்த வேண்டும். சிந்தப்படுகிற இரத்தத்தினால் உன் சாபம் மாறி ஆசீர்வாதம் உண்டாகும்" என்று சொன்னார்.

ஆகவே, எங்கள் கிராமத்திலிருந்து 2 சிறுவர்களை கடத்தி அச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிலைக்கு முன்பாக நரபலி கொடுத்தேன்! மூன்றாவது நரபலிக்கு ஆள் கிடைக்கவில்லை. ஆகவே, என் சொந்த மகனையே கடந்த வாரத்திலே ஒருநாள் அழைத்துச் சென்று, அந்த சிலைக்கு நரபலி செலுத்தி, இரத்தத்தைத் தெளித்தேன். நம்முடைய சாபத்தை மாற்ற இயேசு இரத்தம் சிந்தினார் என்ற செய்தி முன்பே எனக்குத் தெரிந்திருந்தால், இக்கொலைகளை நான் செய்திருக்கமாட்டேனே, நீங்கள் ஒரு வாரத்திற்கு முன்பு வந்து இந்த செய்தியை சொல்லியிருந்தால் என் மகனை என் கைகளினாலேயே பலியிட்டிருக்கமாட்டேனே?" என்று சொல்லி கதறி அழுதார்.

இயேசுகிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி அந்த மனிதனுடைய மனக் கண்களைத் திறந்தது. இன்றைக்கு அந்த மனிதனைப் போல இயேசுகிறிஸ்து ஆகிய நற்செய்திக்காக ஏங்கிக்கொண்டிருக்கின்ற கோடிக்கணக்கான மக்கள் நம் தேசத்தில் உண்டு. அறிந்திருக்கின்ற நாம் தானே அந்த நற்செய்தியை அறிவிக்க வேண்டும். இது நம்மேல் விழுந்த கடமையல்லவா? நாம் இயேசு கிறிஸ்துவால் பெற்றிருக்கின்ற பாவ மன்னிப்பின் சந்தோஷத்தை, ஆசீர்வாதத்தை நம் தேச மக்கள் யாவரும் பெற்றுக்கொள்ள வாஞ்சிக்க வேண்டும். இந்த நற்செய்தி மூலமாக பாவ வாழ்க்கையில் இருந்த பலர் இன்று பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பல வேளைகளில் அரசாங்கம் செய்யமுடியாததை சுவிசேஷம் செய்கிறது. காரணம் இயேசு கிறிஸ்துவைக் குறித்த சுவிசேஷம் வல்லமையுடையதாய் உள்ளபடியினால் இதை நாம் தேசம் எங்கும் அறிவிக்க வேண்டும். எந்த ஒரு மதமும் ஒரு மனிதரது வாழ்க்கையை மாற்றிவிட முடியாது. ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து ஒரு மதத்தை தாபிக்கவும் இல்லை. மதத்தைப் பரப்புங்கள் என்று சொல்லவுமில்லை. "உலகெங்கும் சுவிசேஷத்தை அறிவியுங்கள்" என்று தான் இயேசு கூறினார்.

இயேசு கிறிஸ்துவில் நாம் பெற்றிருக்கிற சந்தோசத்தையும், ஆசீர்வாதத்தையும் மற்றவர்களுக்கு அறிவிக்காமலிருந்தால், நாம் பாவம் செய்தவர்களாயிருப்போம்!

நீங்கள், படித்துக் கொண்டிருக்கிற ஒரு மாணவராயிருக்கலாம், நீங்கள் வேலை செய்துகொண்டிருக்கலாம். எப்படியாவது உங்களுக்கு அருகிலுள்ள மக்களுக்கு, இயேசு கிறிஸ்து உங்களுக்குக் கொடுத்த இரட்சிப்பின் சந்தோசத்தைப் பற்றி, அற்புதங்களை, நன்மைகளைப் பற்றி அறிவியுங்கள். ஆவியானவர் தாமே உங்களை வழிநடத்துவாராக!

**சகோதரி சாரா**
நாவற்குடா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் செயல்படும் கடவுள்

வெளிப்படுத்தல் 1:8
திருவெளிப்பாடு 1:8



**"அகரமும் னகரமும் நானே" என்கிறார் கடவுளாகிய ஆண்டவர். இருந்தவரும் இருக்கின்றவரும் வரவிருக்கின்றவரும் எல்லாம் வல்லவரும் அவரே"**

கடவுள் யோவானுக்கு தன்னை அல்பாவாகவும் ஒமேகாவாகவும் வெளிப்படுத்துகின்றார். இங்கு அல்பா, ஒமேகா என்பது கிரேக்க எழுத்துக்களின் முதலும் கடைசியுமான எழுத்துக்கள் ஆகும். இதன் மூலம் கடவுள் ஆதியும் அந்தமுமாக அதாவது தொடக்கமும் நிறைவுமாக இருக்கின்றார் என்பது புலனாகின்றது (யோவான் 1:1–3). எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகின்ற தன்மையுள்ளவராக கடவுள் காணப்படுகின்றார். எனவே, வாழ்வில் ஒவ்வொரு அனுபவங்களுக்குள்ளும் நாம் செல்லும் போது அவைகள் மூலமாக கடவுளின் ஆளுகையை நாம் உணர்ந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகின்றோம்.

கடவுளுக்கு வழங்கப்படும் நாமங்களுள் இன்னுமொன்றாக இருந்தவரும் இருக்கின்றவரும் எனக் குறிப்பிடப்படுகிறது. இப்பெயர்கள் பழைய ஏற்பாட்டில் விடுதலைப் பயண நிகழ்வோடு தொடர்புடையதாகக் காணப்படுகிறது. குறிப்பாக கடவுள் துன்புறும் மக்களின் பிரதிநிதியாகிய மோசேக்கு தன்னை வெளிப்படுத்தும் போது இருக்கின்றவர் நானே உன்னை அனுப்பினேன் என்ற பதம் மூலம் கடவுள் துன்புறுத்தப்படும் மக்களுடன் தன்னை அடையாளப்படுத்தும் ஓர் செயற்பாடாகக் காணப்படுகின்றது. இதே வகையில் கி.பி.64ம் ஆண்டு நீரோ மன்னனினால் துன்புறுத்தப்படும் மக்கள் மத்தியில் தொடர்ந்து இறைவனின் பிரசன்னம் இருக்கின்றது என்பதைக் காட்டுவதற்காக கடவுள் யோவானுக்கு தன்னை மறுபடியும் வெளிப்படுத்துகின்றார். இதன் மூலம் வரலாற்றின் ஊடாக கடவுள் செயல்படுகின்றார் என்றும் துன்பப்படுகின்றவர்களின் நண்பர் அவர் என்பதையும் இப்பதம் எடுத்துக் காட்டுகின்றது.

யோவான் கடவுளை சர்வ வல்லமையுள்ளவராகக் காண்பிக்கின்றார். இங்கு சர்வ வல்லமையுள்ளவர் என்ற பதம் அனைத்து தீமைகளையும் மேற்கொள்ளவல்ல அதிகாரமுள்ள ஒருவராக காண்பிக்கவில்லை. ஏனெனில், யோவான் இந்நற்செய்தியை எழுதும் பொழுது கிறிஸ்தவர்கள் பலவிதமான துன்பங்களுக்கு உள்ளாகியிருந்தனர். எனவே, கடவுளை அத்தகைய துன்பங்களை நீக்கும் ஒருவராக யோவான் காண்பிக்கவில்லை. மாறாக சர்வ வல்லமையுள்ளவர் என்பதன் பொருள் என்னவெனில், கடவுள் தம்முடைய அதிகாரங்களை மக்களுடன் பகிர்ந்துகொள்கின்றார். எனவே, நன்மை செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரமும் தீமை செய்யும் அதிகாரமும் மனிதனிடம் காணப்படுகின்றது. அவன் அந்த அதிகாரங்களை எவ்வாறு பயன்படுத்துகின்றான் என்பதிலேயே கடவுளின் சர்வ வல்லமைத் தன்மை நிரூபிக்கப்படுகின்றது. இதன் ஊடாக ஆசிரியர் கிறிஸ்தவர்கள் நீரோ மன்னனினால் கட்டவிழ்க்கப்பட்டு இருக்கின்ற துன்பங்களுக்கு கடவுள் காரணர் அல்ல. மாறாக, கடவுளிடமிருந்து அதிகாரத்தைப் பெற்ற மனிதனே காரணம் என்பதை நிரூபிக்கின்றார்.

கடவுள் ஆதியும் அந்தமும் இல்லாதவராக இருப்பதனால் அதாவது ஆதிக்கும் அந்தத்திற்கும் அவரே காரணராக இருப்பதனால் அவர் எல்லாருக்கும் உரியவராகக் காட்டப்படுகின்றார். அதாவது அவரை நாம் எமது அனுபவங்களுக்குள்ளோ, கலாசாரத்திற்குள்ளோ, புவியியல் எல்லைகளுக்குள்ளோ கட்டுப்படுத்திவிட முடியாது. இதன் மூலம் ஆசிரியர் கடவுளின் அனைத்துலகத் தன்மையுள்ள பண்பையும் அனைத்து சூழல்களின் மத்தியில் அவரது செயற்பாட்டின் தன்மையையும் புரிந்துகொள்ளுமாறு எம்மை அழைக்கின்றார். இதனூடாக கடவுள் கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல, ரோமர்களுக்கும் அவர் கடவுளே என வலியுறுத்துகின்றார். இங்கு உரோமர்கள் செசாரை கடவுளாகக் கருதி, வழிபட்டு வந்தனர். ஆனால் கிறிஸ்தவர்களோ இத்தகைய வழிபாட்டை நிராகரித்தனர். இவ்வாறு நிராகரித்ததன் விளைவாகவே அவர்கள் துன்புறுத்தப்பட்டனர். துன்புறுத்தப்பட்ட மக்களை உற்சாகப்படுத்தும் வகையில் ஆசிரியர் கடவுளை வர இருப்பவராகவும், துன்புறுத்துவோரைத் தண்டிப்பவராகவும் காண்பிக்கின்றார். இத்தகைய அறிமுகம் கிறிஸ்தவர்களுக்குப் புதிய உற்சாகத்தை வழங்கியது. மேலும் கடவுளை வரலாற்றில் செயல்படுபவராக கண்டு உணரவும் வாய்ப்பளித்தது.

**அருட்பணி அருளம்பலம் ஸ்ரீபன்**
இலங்கை இறையியல் கல்லூரி.
பிலிமத்தலாவை.

# கவிதைப்போட்டி - 42

கீழேயுள்ள வசனத்திற்குப் பொருத்தமான சமகால சிந்தனையோடு 4 வரிகளுக்குள் அடங்கக்கூடிய உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதைகள் எதிர்வரும் இதழில் பிரசுரிக்கப்படுவதுடன் பரிசில்களும் வழங்கப்படும்.

**"கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள் மேலும்..."** (சங்கீதம் 103 : 17)

இறுதித் திகதி **04.10.2012**

## கவிதைப் போட்டி - 41ல் வெற்றிபெற்ற சிறந்த கவிதை

**"மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல் கர்த்தருக்கென்றே...."**
- (எபே. 6:8)



மனித மனமே ஏன் கலங்குகிறாய் நீ....
மனிதருக்கு அடிமையாகாமல் என்றும்
கர்த்தருக்கென்று பணி செய்தால்
மனிதனை விட கர்த்தர் பலன் தருவார்...
உணர்ந்துகொள் இன்றே அதை நீயும்.


திருமதி. புவனா வேல்நாயகம்
கோட்டைக்கல்லாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபன்

# குறுக்கெழுத்துப் போட்டி – 57







## இடமிருந்து வலம்

01. விசுவாசியாதவன் இதற்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (திரும்பியுள்ளது).
03. பிள்ளையானவனை நடக்கவேண்டிய வழியிலே நடத்தும்போது இவ்வயதிலும் விடாதிருப்பான் (குழம்பியுள்ளது).
05. இதிலே அனலாயிருங்கள் என்று வேதம் கூறுகின்றது (திரும்பியுள்ளது).
07. தாழ்மையுள்ளவர்களுக்கு கர்த்தர் இது அளிக்கிறார்.
09. இவ்விடத்தின் தண்ணீர் கசப்பாயிருந்ததால் இஸ்ரவேலரால் குடிக்க கூடாமற்போனது.
10. நோவாவின் தகப்பன்.
14. போத்திபார் இவனுடைய பிரதானியாக இருந்தான் (குழம்பியுள்ளது).
16. இவன் அறிவோடு நடந்துகொள்கிறான் (திரும்பியுள்ளது) (உதவி - நீதிமொழிகள்).
17. நாம் இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த இதனை தரிக்கக் கூடாது.

## மேலிருந்து கீழ்

01. புருஷன் இவளுக்கு தலையாயிருக்கிறான் (குழம்பியுள்ளது).
02. பிரிஸ்கில்லாளின் கணவன்.
03. பவுல் பிரயாணம் பண்ணின தேசங்களில் ஒன்று (குழம்பியுள்ளது).
04. கர்த்தருடைய தூதனால் "பராக்கிரமசாலியே" என அழைக்கப்பட்டவன் (முதல் எழுத்து இல்லை).
06. இவன், மிருக ஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளையுடைய சீமானாயிருந்தான்.
08. பெதஸ்தா என்பது ஒரு ........ (தலைகீழ் - இறுதி எழுத்து இல்லை).
11. மனுஷருக்குள்ளே இவ்வாறாக எண்ணப்படுவது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது. (2ம், 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன).
12. இதிலே உறுதியாய் தரித்திருங்கள் என வேதம் கூறுகிறது.
13. இது இல்லாத விசுவாசம் செத்தது. (தலைகீழாயுள்ளதுடன் இறுதி எழுத்து இல்லை)
14. நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால் பக்தியில்லாதவனும் இவனும் எங்கே நிற்பான்.
15. கோடரியானது மரங்களின் இதன் அருகே வைக்கப்பட்டுள்ளது என சகரியாவின் குமாரன் கூறுகிறான் (தலைகீழ்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 56 இற்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

01. சைகை
02. நாதாப்
04. வட்டி
06. பரலோகராஜ்யம்
08. வலதுபாரிசம்
12. ம்கலோரப (பரலோகம்)

**மேலிருந்து கீழ்**

01. சைட்ரீப் (பரீட்சை)
02. நாட்ள்க (நாட்கள்)
03. தாடி
05. பட்யடம் (பட்டயம்)
07. லோத்து
08. வண்டு
09. பாதம்
10. சமேலோ (சலோமே)
11. லிப (பலி)

குறுக்கெழுத்துப் போட்டி 56க்கான சரியான விடை அனுப்பியவர்களில் பரிசுக்குரிய அதிஷ்டசாலி

**J.நிசாந்தன்**
மாராநாதா சிறுவர் இல்லம், காந்திகிராமம், கொக்குவில், மட்டக்களப்பு.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான எம் இதழைத் தொடர்ந்து இலவசமாகப் பெறுவார்.

**குறுக்கெழுத்துப்போட்டி 57ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 04.10.2012**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

ஆசிரியர்,
குறுக்கெழுத்துப்போட்டி - 57
"வாலிபன்",
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்
மட்டக்களப்பு.



## சிறுவர்களுக்கான
## வினா விடைப் போட்டி இலக்கம் - 49

1) இயேசுவுக்கு ஓர் ஸ்திரீ நளத தைலத்தைப் பூசியது எந்த ஊரிலே நடந்தது?

.............................................................................................

2) அச்சந்தர்ப்பத்தில் இயேசு யாருடைய வீட்டிலே போஜன பந்தியிருந்தார்?

.............................................................................................

3) இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்காக யூதாஸ் எவ்வளவு பணம் கேட்டான்?

.............................................................................................

4) "எது உற்சாகமுள்ளதுதான், ஆனால் மாம்சமோ பலவீனமுள்ளது" என இயேசு கூறினார்?

.............................................................................................

5) சேவல் எத்தனை முறை கூவுகிறதற்கு முன்னே பேதுரு இயேசுவை மறுதலித்தான்?

.............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினா விடைப் போட்டி**

**48 இற்கான விடைகள்**

1) திமேயு
2) தாவீதின்
3) கழுதை
4) ஜெபவீடு
5) அத்திமரம்



**வினா விடைப் போட்டி 48 இல்**
**சரியான விடை எழுதி**
**பரிசுபெறும் அதிஷ்டசாலி**

**K.மெக்லோ ஷரோன்**
கனேடிய வீதி,
பெரிய கல்லாறு - 2.

- இப்போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றினைப் பரிசாகப் பெறுவர்.
- வினா விடைப்போட்டி 49 இற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : **04.10.2012**

**அனுப்ப வேண்டிய முகவரி :**
**ஆசிரியர்,**
**வினாவிடைப் போட்டி - 49**
**'வாலிபன்' -**
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,**
**மட்டக்களப்பு.**



## போட்டி பற்றிய நிபந்தனைகள் :

- *16 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.*
- ஞாயிறு பாடசாலை அதிபர் / ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

## அழிவினின்று...



அழிவு எனும் விளிம்புதனில் வாழ்கிறாயோ அவனிதனில்!
அனலுமின்றிக் குளிருமின்றி அலைகிறாயோ இவ்வுலகில்
அண்டிவிடு இயேசுவிடம் அழிவினின்று மீட்டிடுவார்
அணைத்து உன்னைச் சேர்த்திடுவார் அபிஷேகம் தந்திடுவார்

அந்தரங்கப் பாவமதை யாரறிவார் என்கிறாயோ!
அசுத்தமான வாழ்வுதனை அருந்த நீயும் துடிக்கிறாயோ
அன்பு செய்ய யாருமில்லை என்று நீயும் ஏங்குறாயோ
அறிக்கையிடு அவரண்டை அகமகிழ்ந்து ஏற்றிடுவார்

பாவமுன்னைத் தொடர்கையிலே பரிசுத்தரைப் பார்த்துவிடு
பாவியென்று தள்ளாமல் பக்கத்திலே அணைத்திடுவார்
பட்டினியில் வாழ்வோரை பசியினின்று மீட்டுவிடு
பயனற்ற உன்வாழ்வைப் பசுமையாக மாற்றிடுவார்

பாதகன்போல் தொங்கிய நம் இயேசுவையே நோக்கிவிடு
பழிவாங்க நினைப்போரை பாசத்தோடே அணைத்துவிடு
பண்பாகப் பழகிவிடு பரிவை நீயும் காட்டிவிடு
பகட்டை நீயும் வெறுத்துவிடு அவர் பணி செய்ய வந்துவிடு

**சகோ.ஜேம்ஸ் சர்வா - திருக்கோவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனி பாவம் செய்யாதே...

**"தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"- (யோவா 3:16)**

பாவம் செய்யாத மனிதர்கள் இந்த உலகத்தில் யாருமே இல்லை. மனிதராகப் பிறந்த நாம் யாருமே "எந்தவித பாவமும் செய்யவில்லை", "நான் பரிசுத்தமாய்த்தான் இருக்கிறேன்" எனக் கூறிவிட முடியாது. அப்படிக் கூறுகிறவர்களாய் இருந்தால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். இயேசு கிறிஸ்துவை தமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு இரட்சிப்பின் அனுபவத்திற்கூடாக கடந்து வந்த பிள்ளைகள் கூட பல வேளைகளிலும் தவறான காரியங்களை நோக்கி ஓடுவதுண்டு. "நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை. நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன்" (ரோம 7:15) என அப்போஸ் தலனாகிய பவுல் கூறிய வார்த்தைகள் எங்களுடைய வாழ்விலும் முற்றுப்பெறு கிறதை உணரமுடிகிறதல்லவா? இவ்வாறு தூண்டப்படுவதற்கு / செய்வதற்குக் காரணமாக இருப்பது நமக்குள் வாசமா யிருக்கிற பாவமே ஆகும்.

இன்று எங்கு பார்த்தாலும் பாவச் செயல்களும் அக்கிரமச் செயல்களும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. கொலைகள், விக்கிரகாராதனை, விபச்சாரம், சண்டைகள், இச்சைகள்.... என்று பாவச் செயல்களை அடுக்கிக்கொண்டே போகலாம். "பாவத்தின் சம்பளம் மரணம்" என்று வேதம் கூறுகிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பாவத்திற்குப் பரிகாரமாக மிருகங்கள் (பிரதானமாக ஆட்டுக் குட்டி), பறவைகள் (புறா / புறாக் குஞ்சு) ஏழைகளின் காணிக்கைகள் போன்ற பல பலிகளைச் செலுத்தினார்கள். இது பாவத்தைத் தீர்த்து பாவமன்னிப்பளிப்பதாக அமையவில்லை. மாறாக மனிதர்களின் அநியாயம், அக்கிரமம், பாவச் செயல்கள் என்பன அதிகரித்துக்கொண்டே சென்றன. சாபம் சந்ததி சந்தியாக தொடர்ந்து வந்தது. பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் மனிதருக்கு மீட்பு உண்டாக வேண்டுமென்றால் மனித இரத்தம் சிந்தப்பட வேண்டி இருந்தது. எனவே நம்முடைய பாவங்களிலிருந்து நமக்கு நிலையான மீட்பையும்', விடுதலையையும் பெற்றுத்தருவதற்காக பிதாவாகிய தேவன் தம்முடைய ஒரே பேறான மைந்தன் இயேசு கிறிஸ்துவை இப்பூமிக்கு அனுப்பினார் (ஏசா 53:6).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மைத்தாமே வெறுமை யாக்கி அடிமை யின் ரூபமெடுத்து மனுஷர் சாயலான இயேசு கிறிஸ்து (பிலிப் 2:7) இப்பூமியி லுள்ள ஒவ்வொருவருடைய பாவத்திற் காகவும் தாமே இரத்தம் சிந்தி சிலுவை யில் பலியானார். எமக்காக தம் உயி ரையே பலியாக்கிய இவ் அன்புத் தகப் பன் எதிர்பார்ப்பதெல்லாம் **நாம் எப்பொ ழுதும் பரிசுத்தமுள்ள பிள்ளைகளாய் ஜீவிக்க வேண்டும்** என்பதே. நாம் பாவிக ளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணியிருக் கிறார் அல்லவா?

முப்பத்தெட்டு வருடங்கள் வியாதி யாயிருந்த ஒரு மனுஷனை இயேசு சொஸ்தமாக்கி அவனுக்கு விடுதலை கொடுத்த சம்பவத்தை யோவான் 5ம் அதிகாரத்தில் வாசிக்க முடியும். ஒன்று, இரண்டு வருடங்கள் அல்ல.... முப்பத்தெட்டு வருடங்கள். பிசாசு அந்த மனிதனின் சரீ ரத்தைக் கட்டி வைத்திருந்த காலம் எவ்வ ளவு நீண்டதாயிருக்கிறது. எழுந்து நடக்க முடியாதபடி கொடூரமான வியாதி யினால் அம்மனிதனின் சரீரத்தை பிசாசு கட்டி வைத்திருந்தான். ஆனாலும் இயேசு கிறிஸ்து அம்மனிதனை தமது வல்லமை யுள்ள வார்த்தையினால் விடுதலையாக் கினார். அவனது கட்டுக்கள் அகன்று போனது. அம்மனிதனது விடுதலைக்குப் பின்னதாக இயேசு ஒரு வார்த்தையைக் கூறுவதை எம்மால் அவதானிக்க முடியும். **"இதோ! நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே"** (யோவா 5:14). அம்மனிதனுடைய நீண்டகால வியாதிப் படுக்கைக்கு ஒரு காரணமாக அமைந்தது அவனுடைய பாவமே. ஆனாலும் அம் மனிதனுடைய பாவங்களை அந்நேரமே இயேசுகிறிஸ்து மன்னித்து அவனுக்கு புது வாழ்வு கொடுக்கிறார். அவன் செய்த ஒவ் வொரு பாவங்களையும் இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டி அவனை வேதனைப்படுத்த வில்லை. அவனுக்குத் தண்டனை கொடுத்து, அவனை வேடிக்கை பார்க்கவில்லை. மாறாக இனியும் அவனது சரீரம் வியா தியினால் மரித்துவிடக்கூடாது என்பதற் காக அன்புள்ளம் கொண்ட இயேசு **"இனி பாவஞ் செய்யாதே!"** எனக் கண்டித்து உணர்த்துகிறார்.

ஒருநாள் பதின்மூன்று வயதுச் சிறுமி ஒருத்தி பள்ளிக்கூடத்திலி ருந்து ஒரு பழைய கலண்டரை (Calander) ஆசிரியையிடம் கேட்கா மல் எடுத்துப் போய்விட்டாள். மறு நாள் அந்த ஆசிரியை, சிறுமியை அழைத்து, "கலண்டரை நீதானா எடுத்தாய்"? என்று கேட்டார். "ஆம்! நான்தான் எடுத்தேன். தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள்" என்று மன்னிப்புக் கேட்டாள் அந் தச் சிறுமி. ஆசிரியைக்குக் கோபம் வந்துவிட்டது. ஒரு அட்டையை எடுத்து "நான் ஒரு திருடி!" என்று எழுதினாள். அதை அந்தச் சிறு மியின் கழுத்தில் மாட்டினாள். பின் ஒவ்வொரு வகுப்பாக அந்தச் சிறு மியைக் கொண்டுபோய் காட்டி னாள். அந்தச் சிறுமியின் உள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடைந்தது. மாலையில் வீட்டுக் குச் சென்றவள், தற்கொலை செய்து கொண்டாள். அந்த ஆசிரியை அந்தப் பிஞ்சுக் குழந்தை செய்த குற்றத்தை அவள் மன்னிப்புக்கேட்ட பிறகும், மன்னித்து மறக்க மனமற் றுப்போனதால் என்ன விபரீதம் வந்துவிட்டது பாருங்கள்.**

சாதாரணமாக, நாம் வாழும் இவ் உலகத்தில் மனிதர்கள் இவ்வாறுதான் நடந்துகொள்வார்கள். நாம் ஒரு தவறு செய்திருந்தால் திரும்ப திரும்ப அதையே சுட்டிக்காட்டி நம்மை வேதனைப்படுத்து வார்கள். நம்மை பகைப்பார்கள். ஆனா லும் நம்மை எப்போதும் நேசிக்கிற இயேசு கிறிஸ்து அப்படிப்பட்டவரல்ல. அவரு டைய பிள்ளைகளாகிய நாம் எப்போதும் அவருக்குள்ளாக, அவருக்கு சாட்சியான பரிசுத்தமுள்ள ஜீவியம் ஜீவிக்க வேண்டும் என வாஞ்சிப்பவர். நாம் செய்த பாவங் களை, குற்றங்களைப் பாராதபடிக்கு அவற்றிற்காக எம்மை பழிவாங்காதபடிக்கு, தமது பரிசுத்த இரத்தத்தாலே எம்மைக் கழுவி எமக்கு விடுதலை கொடுத்து, தம்முடைய சொந்த மகனாக, மகளாக ஏற்றுக்கொள்ளும் நீடிய சாந்தமுள்ள தகப்பன் அவர். "அவர் மன்னிக்கிறதற்கு தயை பெருத்திருக்கிறார் (ஏசா 55:7) என வேதம் கூறுகிறது.

இதை வாசித்துக்கொண்டிருக்கும் அன்புச் சகோதரனே, சகோதரியே, ஒரு வேளை நீ இயேசுகிறிஸ்துவைப் பற்றி இதுவரைக்கும் அறியாமல் இருந்திருக்க லாம். அல்லது அவரை அறிந்திருந்தும் தூரமான வாழ்க்கை வாழ்ந்துகொண்டி ருக்கலாம். உன்னுடைய பாவங்களின் நிமித்தமாக உன்னுடைய சரீரத்தில் பாடுகள், பெலவீனங்கள், வியாதிகள், போராட்டங் கள், குற்ற உணர்வுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறாயா? நீ உன்னுடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த் தரிடத்தில் திரும்புவாயா??

கலங்காதே.... தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரன் இயேசுகிறிஸ் துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடை யும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வள வாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் என் பதை உணர்ந்துகொள். நீ பாவத்திலேயே வாழ்ந்து மடிவது தேவனுடைய சித்தமல்ல. உனக்காகவே இயேசுகிறிஸ்து தம்முடைய கடைசி சொட்டு இரத்தத்தையும் சிந்தி, சிலுவையிலே பலியானார். வல்லமையுள் ளவராய் உயிரோடு எழுந்த இயேசுகிறிஸ்து இன்றும் உனக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் என்பதை மறந்துவிடாதே. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் உன்னுடைய சகல பாவங்களை யும் நீக்கி உன்னைச் சுத்திகரிக்க வல்லது என்பதை உணர்ந்துகொள்வாயானால், இந்த சிறிய ஜெபத்தை மன உணர்வோடு ஏறெடுப்பாயா?

தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும். உமது மிகுந்த இரக் கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என் னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவ மற என்னைச் சுத்திகரியும். என் மீறு தல்களை நான் அறிந்திருக்கிறேன். என்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. என் பாவங்களைப் பாராத படிக்கு நீர் உமது முகத்தை மறைத்து என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும். தேவனே! சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும். நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும் படி செய்யும். இயேசுவின் நாமத்தில் ஜெபம் கேளும் பிதாவே! ஆமென்.

சகோ.J.டெய்சி
கோட்டைமுனை.





# உன் பலத்தை
## எதற்காகவும், யாருக்காகவும்
## இழந்துவிடாதே!

ஒரு காட்டிலாகா அதிகாரிக்கு அழகான ஒரு மகள் இருந்தாள். ஒருநாள் பட்டாம்பூச்சியைத் துரத்திக்கொண்டே அந்தப் பெண் காட்டில் ஓடியபோது, அவளை ஒரு சிங்கம் பார்த்தது. அதற்கு அந்தப் பெண்ணை மிகவும் பிடித்துப்போய்விட்டது. அது நேரே காட்டிலாகா அதிகாரியிடம் சென்று, தனக்கு அவர் மகளைக் கல்யாணம் செய்து வைக்கும்படி கேட்டது.

அதிகாரிக்கு சிங்கத்திடம் பயம். அதனால், "நோ" சொல்ல முடியவில்லை. "என்ன செய்யலாம்" என்று யோசித்தார். அவருக்கு ஒரு ஐடியா தோன்றியது.

அவர் சிங்கத்தைப் பார்த்து, "காட்டு ராஜா.... காட்டுராஜா... என் மகள் ரொம்பப் பயந்தவள். உன்னுடைய பற்களையும் நகங்களையும் எடுத்துவிட்டால், அவளுக்குப் பயம் தெளிந்துவிடும்! அப்புறம், நான் அவளை உனக்குக் கல்யாணம் செய்து தருகிறேன்!" என்று சொன்னார். அந்தப் பெண்மீது கொண்ட ஆசையால் சிங்கம் அதற்குச் சம்மதித்தது. காட்டிலாகா அதிகாரி முதலில் அதன் பற்களைப் பிடுங்கினார். அதன்பின், நகங்களை வெட்டினார். பற்களையும் நகங்களையும் இழந்த சிங்கம் பலம் எல்லாவற்றையும் இழந்து ஆட்டுக்குட்டிபோல் ஆயிற்று! உடனே காட்டு அதிகாரி ஒரு தடியை எடுத்து, அதை "அடி, அடி" என்று அடித்துக் கொன்றார்.

**நியாயாதிபதிகள் 16:19**

**அவள் அவனைத் தன் மடியிலே நித்திரை செய்யப்பண்ணி, ஒருவனை அழைத்து, அவன் தலைமயிரின் ஏழு ஜடைகளையும் சிரைப்பித்து, அவனைச் சிறுமைப்படுத்தத் தொடங்கினாள். அவன் பலம் அவனைவிட்டு நீங்கிற்று.**

"உன் பலத்தை எதற்காகவும், யாருக்காகவும் இழந்துவிடாதே"

Bro.C.J.Zeba
"உமக்காக ஊழியங்கள்" - தென் இந்தியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FRIENDS BE ALERT



School, University இல் படிக்கும் நம் நண்பர்கள் "டேய், இந்த ஒருமுறை Class அ கட் (cut) பண்ணிட்டு எங்க கூட வாடா" என்று அழைப்பது வழக்கம். "ஒரு தடவை smoke பண்ணிப் பாருடா" என்று சிகரட்டை நீட்டும் நண்பர்கள் பலரும் உண்டு. இதுபோன்ற சந்தர்ப்பங்கள் தவிர்க்க முடியாதவையாகவே தோன்றும்.

நண்பர்களுக்காக, தோழிகளுக்காக 'ஒருமுறை' என்று ஒன்றை செய்துவிட்டால், பிறகு என்ன ஆகும்? "நேற்று செய்யவில்லையா?", "போன வாரம் யாருக்கும் தெரியாமல் ஸ்மோக் பண்ணவில்லையா?" என்று மீண்டும் மீண்டும் அதே தவறுகளை செய்ய நம்முள் தைரியம் பிறக்கும். பிறகு அவை தொடர்கதையாகிவிடும்.

நம் எண்ணத்தில் நடக்கும் போரின் விளைவே, இதுபோன்ற தடுமாற்றங்கள்; கேள்விகள்!

நம் மனதில், சிந்தையில், எண்ணத்தில் இடம்பிடிப்பதற்காக இருவருக்கிடையே போர் நடந்துகொண்டே இருக்கிறது. 'போர்' என்றவுடன் நாம் வரலாற்றில் படிக்கும் போரை நினைத்துவிடாதீங்க. இது வேறு மாதிரியான யுத்தம். ஆண்டவரும், சாத்தானும் நம் மனதில் இடம்பிடிப்பதற்காக இடையறாது போர் செய்து கொண்டே இருக்கின்றனர்.

"இவன் என் மகன். இவன் மனதில் எனக்குத்தான் இடம் இவனை எனக்கு விருப்பமான பாதையில் நடத்துவேன்" என்று ஆண்டவர் நம்மில் உரிமை பாராட்டுகிறார். சாத்தானும், இவள் என் மகள், எனக்குப் பிரியமானவள், இவளது சிந்தையை, எண்ணத்தை நான் தான் ஆளுகை செய்வேன்" என்று உறுதியாய் நிற்கிறான்.

இந்தப் போராட்டத்தின் விளைவுகள் தான் நம் மனதில், சிந்தனையில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இதில் பலர் பிசாசின் பக்கம் விழுந்துவிடுகின்றார்கள். தங்கள் எண்ணம், சிந்தனைகளை பிசாசின் ஆளுகைக்கு ஒப்புவிக்கின்றனர். "பிசாசுக்கு இடங்கொடாமல் இருங்கள்" (எபே 4:27) என்று வேதாகமம் எச்சரிக்கிறது. ஒரு சிறிய தடுமாற்றம் போதும், பிசாசு உங்கள் மனதுக்குள் நுழைந்துவிடுவான். உங்கள் எண்ணம் முழுவதையும் சிறைப்பிடித்துவிடுவான். ஒருமுறை அவன் சொற்படி நடந்துவிட்டால், அதன் பின் மீண்டும் ஆண்டவரிடம் திரும்பி விடாதபடிக்கு உங்கள் மனதில் பயத்தை, குற்ற உணர்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுப்பிவிடுவான். "ஐயோ! நான் ஆண்டவருக்கு விரோதமாகப் பாவம் செய்து விட்டேனே, என் பெற்றோருக்குத் துரோகம் செய்துவிட்டேனே, என்ற குற்ற உணர்ச்சி உங்களுக்குள் எழுந்து, ஆண்டவரைச் சந்திப்பதையே தடுத்துப்போடும். இது சாத்தானின் தந்திரங்களில் ஒன்று!

ஆதாமும், ஏவாளும் சாத்தானின் சொல்லைக்கேட்டு, ஆண்டவருக்கு விரோமாகப் பாவம் செய்தபின்பு, அவர்கள் ஆண்டவரைப் பார்க்கப் பயந்து, அவருடைய சந்நிதிக்கு விலகி ஒளித்துக்கொண்டார்கள் என்று (ஆதி 3:8) வேதத்தில் வாசிக்கிறோம். சாத்தான் தனது வஞ்சனையான வார்த்தையைக் கேட்டு, வழிதப்பிப் போகிறவர்களை, இதேபோல் குற்றவுணர்ச்சியைத் தூண்டிவிட்டு தனக்கு அடிமைகளாக வைத்துக்கொள்வான்.

மேலும், மிகுதியான ஐசுவரியத்தைத் தந்து நமது நிம்மதியைக் கெடுத்து நித்திய அக்கினியில் நம்மைத் தள்ளுவது மட்டுமன்றி, மோகம், சிற்றின்பம், போதைப்பழக்கம், பெயர், புகழ், அகந்தை போன்றவற்றின் உச்சக்கட்டத்தை நமக்குக் காட்டி, நம்மை நரகத்திற்குள் தள்ள முனைகிறான்.

வேதம் கூறுகிறது, "அழிவுக்கு முன்னானது அகந்தை" (நீதி 16:18) மேலும், இறுமாப்புள்ளவன் பிசாசைப் போல் ஆக்கினையடைவான் என்றே வேதம் கூறுகிறது.(2தீமோ3:4) எனவே, இவ்வுலகத்தின் அதிபதியாகிய சாத்தான் கெர்ச்சிக்கிற சிங்கம் போல யாரை விழுங்கலாம் என வகை தேடித் திரிகிறான் என்பதை உணர்ந்து தெளிந்த புத்தியுள்ளவர்களாய், விழிப்புடன் இருக்க வேண்டும். (1 பேதுரு 5:8).

தங்கள் எண்ணத்தை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்த மக்களும் இருக்கிறார்கள். அவர்கள் சாத்தானுக்கோ, தங்கள் சுய விருப்பத்திற்கோ தங்கள் எண்ணத்தைத் திறந்து வைக்காதவர்கள். ஆண்டவரே, என் சிந்தையை நீரே ஆண்டுகொள்ளும் என்று தங்களை அர்ப்பணித்து விட்டவர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, கர்த்தர் அவர்கள் கால்களைத் தள்ளாட விடமாட்டார் (சங்.121:3). ஆகவே, அவர்களால் நித்திய பாதையில் சறுக்காமல் நடக்க முடிகிறது. அப்போது கிறிஸ்து இயேசுவின் சிந்தை இம்மக்களுக்குள் வருகிறது (1 கொரி 2:16, பிலி 2:5).

தம்மை நம்பியிருக்கிற அவர்களை ஆண்டவர் அபரிமிதமாய் ஆசீர்வதிக்கிறார் (நீதிமொழி 10:22) இவ்வுலக வாழ்க்கையின் முடிவிலே அவர்களை மகிமையில் சேர்த்துக்கொள்வார்.

எனவே, Friends உங்கள் மனதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். சாத்தானின் எந்த வஞ்சகத்திற்கும் மயங்கி விடாதீர்கள். நம் மனம், சிந்தை, எண்ணத்தை ஆண்டவருக்கு அர்ப்பணிப்போம். அப்போது அவர் நம் மனதை தீமைக்கு விலக்கிக் காப்பார். இவ்வுலகில் வெற்றியுள்ள ஜீவியத்தை நமக்குத் தருவார்.

**சகோதரி கரோலினா**
கோட்டைமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் கண்ணில் துரும்பு?



ஒரு பெரிய நகரில் சுசி தனது பெற்றோருடன் வாழ்ந்து வந்தாள். அவள் அந்த நகரிலே பிரபல்யமான ஒரு பாடசாலையில் தரம் 7 இல் கல்வி கற்றுக்கொண்டிருந்தாள். மற்றவர்கள் என்ன தவறு செய்கிறார்களோ அதைச் சுட்டிக்காட்வதையே அவள் தனது பொழுதுபோக்காகக் கொண்டிருந்தாள். இதனால் அவளுக்கு அதிகமான நண்பர்கள் இல்லை. ஒருநாள் ஆசிரியர் வீட்டில் செய்துவருமாறு கொடுத்த கணக்கை சுசி, அடுத்தநாள் காலை பாடசாலையில் தனது நண்பி சீதா செய்து வந்ததைப் பார்த்து எழுதினாள். ஆனால் இதேபோன்று ஒருநாள் சீதா சுசி எழுதியதைப் பார்த்து எழுதியதை சுசி தனது ஆசிரியரிடம் சொல்லி சீதாவிற்கு தண்டனை வாங்கிக் கொடுத்தாள். இன்னொரு நாள் இதேபோன்று தான் செய்த ஒரு பிழையை மறைத்துவிட்டு மற்ற நண்பி செய்த பிழையை ஆசிரியரி டம் சொல்லிக் கொடுத்தாள். இவ்வாறு தினம் தினம் மற்றவர்களது பிழையை மாத்திரம் சுட்டிக் காட்விட்டு தனது பிழையைப் பற்றி கவலைப்படுவதுமில்லை. அது பிழை என்பதை உணர்வதுமில்லை என்ற நிலைக்கு ஆளாகினாள்.

ஒருநாள் சுசி தனது சக மாணவி செய்துவந்த கணக்கைப் பார்த்து எழுதினாள். அதேசமயம் வேறொரு மாணவி பார்த்து எழுதியதை ஆசிரியரிடம் சொல்லிக் கொடுத்தாள். ஆசிரியர் ஒவ்வொருவரும் செய்து வந்ததை திருத்தும் போது சுசி ஆசிரியரிடம் பிடிபட்டாள். சுசி பார்த்து எழுதிய அந்த மாணவி பிழையாக விடை எழுதியிருந்தாள். அதைப் பார்த்து எழுதிய சுசியும் பிழையாகவே எழுதியிருந்தாள். ஆசிரியர் இருவரையும் கூப்பிட்டு விசாரிக்கத் தொடங்கினார். அப்போது ஆசிரியர் சுசிதான் தவறு செய்தவள் என்பதைக் கண்டுகொண்டார். ஆசிரியர் சுசியிடம் ''முதலில் நமது பிழைகளை இனங்கண்டு அவற்றை நாம் திருத்திய பின்பு தான் மற்றவர்களுடைய பிழையைப் பார்க்க வேண்டும்'' என்று கூறி அவளது பெற்றோரை அழைத்து அறிவுரை கூறும்படி சொன்னதுடன், அதிபர் சுசியை 2 நாட்கள் பாடசாலை வருவதற்குத் தடையை ஏற்படுத்தினார். அன்றைய நாளில் சுசி தனது தவறை உணர்ந்தாள். அன்றிலிருந்து மற்றவர்களி டம் குறை கண்டுபிடிப்பதை விட்டுவிட்டாள். தன்னிலிருந்த பிழைகளை திருத்தத் தொடங்கினாள்.


அன்புத் தம்பிமாரே! தங்கைமாரே! இன்று நம்மில் அநேகர் இதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிழையை விட்டுக்கொண்டிருக்கிறோம். நாம் எமது குறைகளை இனங்காணாமல் மற்றவர்களுடைய குறைகளைப் பெரிதாக எடுத்து அதைப் பறைசாற்றுவதிலே குறியாக இருக்கிறோம். ஆனால் இயேசப்பா மத்தேயு 7:3–5 இல் இவ்வாறு கூறுகிறார். "நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணில் இருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? முதலில் எமது பிழைகளை இனங்கண்டு அவற்றைத் திருத்திவிட்ட பின்னரே மற்றவர்களுடைய தவறுகளைப் பற்றி சிந்திக்க வேண்டும். இன்றிலிருந்தாவது நம்மை நாம் மாற்றிக் கொள்வோமா?

**P.R.ஜீவந்தி**
கோட்டைமுனை

# கல்லாறு மெதடிஸ்த திருஅவை 116வது ஆண்டு நிறைவு விழா



- **சேகர முகாமைக்குரு** – அருட்திரு. J.W. யோகராஜா
- **சபைக்குரு** – அருட்திரு. S.சசிக்குமார்
- **தேவாலய மூலக்கல் நடப்பட்டது** – 1896ம் ஆண்டு ஆவணி மாதம் 4ம் திகதி.
- **தேவாலய மதில் கட்டப்பட்டது** – 1922ம் ஆண்டு
- **புதிய ஆலய நிர்மாணம்** – 1890ம் ஆண்டு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் ஜெபத் தேவைகளை

## எங்களுக்குத் தபால் மூலமாகவோ,
## மின்னஞ்சல் மூலமாகவோ,
## SMS மூலமாகவோ அனுப்பி
## வைக்கலாம்.



**SMS க்கான இலக்கங்கள்**

**077-7813269,**
**077-2335106,**
**077-9584930,**
**077-7718847**

வாலிபர்களுக்கான விஷேட ஜெபம்
ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும்
காலை 7.00 மணிக்கு
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயத்தில்**
இடம்பெறும்.



இப்புத்தகத்தை தங்களது சபைகளிலும், அறிமுகம் செய்ய விரும்புபவர்கள் தயவாய் எம்மைத் தொடர்பு கொள்ளவும். இதன் மூலமாய் வரும் ஆசீர்வாதங்கள் தங்களது வாழ்வையும், சபைகளையும் நிரம்புவதாக!


**மெதடிஸ்த வாலிபர் ஒன்றியம்**
**கோட்டைமுனை.**

அடிதத் தொடர்புகளுக்கு :

**ஆசிரியர்,**
**"வாலிபன்" சஞ்சிகை,**
மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை,
மட்டக்களப்பு, இலங்கை.
மின்னஞ்சல் :vaalipan_kyf@yahoo.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org